**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 138/2012 Date:04.08.2025**

**(PW2)- செல்லத்துரை**

<u>**3,4** ம் பிரதிவாதி தரப்பு **குறுக்கு விசாரணை**</u>

**1.** எனது ஊரில் முருகன் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலில் எனக்கு வரி உண்டா என்றால் உள்ளது. மேற்படி முருகன் கோவில் சுப்பிரமணிய புரம் என்று உள்ளதா, நங்கன் விளை என்று உள்ளதா என்றால் நங்கன் விளை என்று உள்ளது. நங்கன் விளையில் முருகன் கோவில் இல்லையென்றாலும் மேற்படி முருகன் கோவில் சுப்பிரமணியபுரத்தில் உள்ளது என்றாலும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன்என்றாலும் சரியல்ல. சுப்பிரமணியபுரத்தில் உள்ள முருகன் கோவில் எத்தனை ஆண்டுகள் பழமையானது என்றால் சுமார் 400 வருடங்கள் பழமையானது.

**2.** மேற்படி முருகன் கோவிலில் எத்தனை வருடங்களாக உறுப்பினராக இருக்கிறேன் என்றால் பிறந்ததிலிருந்து உறுப்பினராக இருக்கிறேன். சுப்பிரமணியபுரம் நெட்டாங்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதி என்றால் சரிதான். இலந்தைவிளையும் நெட்டாங்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதி என்றால் சரிதான். நங்கன் விளையில் சிவன் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிவன் கோவிலில் எனக்கு வரி கிடையாது என்றால் சரிதான். பிவாசாஆ. 1 வரைப்படத்தில் சிவன் கோவில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளதுஎ ன்றால் முருகன்கோவிலுக்கு தெற்கு பக்கம் அமைந்துள்ளது (சாட்சி ஆவணத்தை பார்த்து பதிலளிக்கிறார்) .

**3.** மேற்படி சுப்பிரமணியப்புரத்தில் வழக்கில் குறிப்பிட்டுள்ள 7 நபர்களை தவிர மற்ற நபர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லையென்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணியப்புரத்தில் உள்ள சிவசுடலைமாட சுவாமி கோவில், முருகன் கோவில், சிவன் கோவிலின் நிர்வாகிகளை வழக்கில் தரப்பினராக

சேர்க்கவில்லையென்றால் சரிதான். நங்கன்விளை ஊரின் வரைப்படம், எல்கை, அளவு மற்றும்வழக்கில் குறிப்பிட்டுள்ள செருப்பங்கோடு ஊரின் வரைப்படம், எல்கை, அளவு , புல எண் முதலியன குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல.

**4.** நங்கன்விளையை ஊரின் அருகிலுள்ள குக்கிராமங்களோடு சேர்த்து விரிவாக்கம் செய்ய வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இரட்டைகரை சானல் இருபுறமும் தார் ரோடு அமைந்துள்ளதால் மேற்படி சானலுக்கு இரட்டைகரை சானல் என்று பெயர் வந்தது என்றால் சரிதான். இரட்டைகரை சானல் உருவாவதற்கு முன்னர் சானலுக்கு கிழக்கு மற்றும் மேற்கு பகுதி செருப்பங்கோடு கிராமம் என்று அழைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இரட்டைகரை சானல் உருவான பின் செருப்பங்கோடு கிழக்கு , மேற்கு என்று மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

**5.** பிவாசாஆ. 1 வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள கம்பி பாலத்தை தாண்டி வலது பக்கம் புல எண் 217ல் அருள்மிகு சிவசுடலைமாட சுவாமி திருக்கோவில் , செருப்பங்கோடு உள்ளது என்றால் சரிதான் (சாட்சி ஆவணத்தை பார்த்து பதிலளிக்கிறார்). மேற்படி கோவில் 400 ஆண்டுகள் பழமையானது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி கோவிலை தாண்டி செல்லும் போது செருப்பங்கோடு சந்திப்பில் ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அந்த பேருந்து நிறுத்தம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தினால் செருப்பங்கோடு என்று பதிவு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**6.** செருப்பங்கோடு பாலத்தை தாண்டி மேற்கு பக்கமாக ஒரு கிராம சாலை புளியடி விளையை நோக்கி செல்கிறது என்றால் சரிதான். மேற்படி கம்பி பாலத்திலிருந்து புளியடி விளையை நோக்கி செல்கிற பகுதியை தான் நான் நங்கன்விளையாக சேர்க்க வேண்டுகிறேன் என்றால் சரியல்ல. புளியடி விளையை நோக்கி செல்லும் சாலையை தாண்டி இலந்தைவிளை உள்ளது என்றால் சரிதான். இலந்தைவிளையில் Salvation Army Church, நியாய விலைக்கடை, Nursery

School உள்ளது என்றால் சரிதான். அதை தாண்டி வரும் போது சுப்பிரமணியபுரம் உள்ளது என்றால் சரியல்ல, முருகன் கோவிலுக்கு பின்புறம் சுப்பிரமணியபுரம் உள்ளது.

**6.** சுப்பிரமணியபுரத்தை தாண்டி தெற்கு பக்கம் நங்கன்விளை சிவன் கோவில் உள்ளது என்றால் சரிதான். சமூக ஒழுக்கத்தை கெடுக்க வேண்டி நங்கன்விளை ஊருக்கு சம்பந்தமில்லாத நான் மேற்படி ஊரின் எல்கையை அதிகரிக்க வேண்டி பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நங்கன்விளை சார்ந்தவர் இல்லையென்றாலும் சுப்பிரமணியபுரத்தை சார்ந்தவர் என்றாலும் சரியல்ல. செருப்பங்கோடு பெயரிட்டு ஆவணங்கள் வழங்கப்பட்டு இருப்பது நியாயமானது என்றால் சரியல்ல.

**7.** பல தலைமுறைகளுக்கு முன்னரே நெட்டாங்கோடு ஊராட்சிக்குட்ட பகுதியாக தான் செருப்பங்கோடு இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 3 கிராமங்களை தாண்டி உள்ள செருப்பங்கோடு பகுதியை நங்கன்விளையாக விரிவாக்கம் செய்ய கேட்பது மிகப்பெரிய வன்முறை நிகழ்வதற்கு காரணமாக அமையும் என்றால் சரியல்ல. நான் வன்முறை தூண்ட வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செருப்பங்கோடு பகுதியில் வசிக்கும் மக்களுக்கு செருப்பங்கோடு ஊரின் பெயரில் ஆவணங்கள் வழங்குவதில் எனக்கு எந்த வித இழப்பும் ஏற்படாது என்றால் சரியல்ல, எனக்கு நிறைய பாதிப்பு உள்ளது, சுதந்திரமாக நடக்க முடியவில்லை.

**8.** செருப்பங்கோடு மேற்கு பகுதி மக்கள் அனைவருக்கும்செருப்பங்கோடு மேற்கு என்ற பெயரில் Plan approval உள்ளிட்ட ஆவணங்கள பெறுவதற்கு அனைத்து உரிமையும் உண்டு என்றால் சரியல்ல. நான் நங்கன் விளை ஊரை represent செய்து இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையுமில்லையென்றால் சரியல்ல. எனது வழக்கிற்கு எந்த முகாந்திரமுமில்லையென்றாலும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக போலியாக உற்பத்தி செய்யப்பட்டவையென்றாலும், மேற்படி ஆவணத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லையெனள்றால் சரியல்ல. வழக்கில்

தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனது பெயரில் பெறப்படவில்லையென்றால் சரியல்ல.

**9.**நான் தாக்கல் செய்துள்ள வாக்காளர் பட்டியலில் பிரதிவாதிகளின் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். எனது வழக்கறிவிப்பு தவறானது என்றால் சரியல்ல. வாதிகளாகிய நாங்கள் நங்கன்விளை சார்ந்தவர்கள் இல்லையென்பதாலும், நாங்களன் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும், இந்த வழக்கு பிரதிவாதிகள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்